# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● பிப்ரவரி 19, 2022 Weekly E-paper ● February 19, 2022




# ஏழை எளியவர்களுக்கு எட்டாக் கனியாகும் எல்.அய்.சி!

மா.உதயகுமார்

## 45 ஆம் புத்தகக் கண்காட்சி

## அசைக்க முடியாத முதல்வர்

தலையங்கம்

## தில்லைக் கோயிலின் தீண்டாமை

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● பிப்ரவரி 19, 2022

Weekly E-paper ● February 19, 2022


# ஏழை எளியவர்களுக்கு எட்டாக் கனியாகும் எல்.அய்.சி!

**மா.உதயகுமார்**

ஆயுள் காப்பீட்டு நிறுவனமான எல்.அய்.சி யின் 5% பங்குகளைத் தனியாருக்கு விற்க ஒன்றிய அரசு முனைந்திருக்கிறது. நாட்டின் சொத்துகளையெல்லாம் விற்றுவரும் ஒன்றிய அரசின் தொடர் நடவடிக்கைகளுள் ஒன்றாகவே எல் ஐ சியின் பங்கு விற்பனை இருக்கிறது.

என்றாலும் வேறு எந்தப் பொதுத்துறை நிறுவனத்தைக் காட்டிலும் சாமானிய மக்களின் வாழ்வில் பெரும் தாக்கத்தை இந்தப் பங்கு விற்பனை ஏற்படுத்தும். இதனால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகளாக எல்.அய்.சி. ஊழியர் சங்கங்கள் முதன்மையாகக் கீழ்க்காணும் சிலவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

இதனால் நாட்டின் பொருளாதாரத்தின் மீது பெரும்பாதிப்பு ஏற்படும். ஒன்றிய அரசின் பத்திரங்களில் எல்.அய்.சியின் முதலீடு 12 லட்சம் கோடிக்கு அதிகமாக இருக்கிறது. மாநில அரசின் பத்திரங்களில் 9 லட்சம் கோடிக்கு எல்அய்சியின் முதலீடு இருக்கிறது. ஆதாரத் தொழில் வளர்ச்சிக்கு எல்அய்சி முதலீடு செய்திருக்கிறது. எல்அய்சி அரசு நிறுவனம் என்பதால் உரிமைகளோடு எல்அய்சியின் பங்களிப்பை அரசு பெற்றிருக்கிறது. தனியார் வசம் எல்அய்சியின் பங்குகள் செல்லும்போது, இலாப நோக்குடன் மட்டுமே எல்.அய். சியின் செயல்பாடு அமையும். இதனால் நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு எல்அய்சி ஆற்றிவரும் பங்களிப்பு கேள்விக்குள்ளாகும்.

கிராமப்புறங்களில் சாமானிய மக்களுக்கான காப்பீட்டை எல்அய்சிதான் வழங்கி வருகிறது. எல்.அய்.சியினுடைய சராசரிப் பிரீமியம் 16 ஆயிரம் ரூபாய்தான். ஆனால் தனியார் நிறுவனங்களின் சராசரிப் பிரீமியம் 89 ஆயிரம் ரூபாய் ஆகும். சாமானிய மக்களுக்கு எல்அய்சிதான் சமூகப் பாதுகாப்பைத் தருகிறது.

20 ஆயிரத்துக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட ஊர்களில் எல்அய்சியின் அலுவலகங்கள் 1472 இருக்கின்றன. ஆனால் தனியார் அலுவலகங்கள் 170தான் இருக்கின்றன. தனியார் அலுவலகங்கள் 75% மெட்ரோ நகரங்களில்தான் இருக்கின்றன.




எனவே சாதாரண அடித்தட்டு நடுத்தர வர்க்க மக்களுக்கு எல்.அய்.சிதான் காப்பீட்டை வழங்குகிறது.

பெண்களுக்கான திட்டங்களை எடுத்துக்கொண்டாலும், எல்.அய்.சிதான் அதிகமாகத் தருகிறது. 35% பாலிசிகளைப் பெண்களுக்காக எல்அய்சி வழங்குகிறது. ஆனால் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் 27%தான் தருகின்றன.

எனவே எல்.அய்.சியின் இந்தப் பங்கு விற்பனை எந்த வகையிலும் மக்கள் நலனுக்கு உதவப்போவதில்லை. இதுவரை மக்கள் அடைந்து வந்தப் பலன்களை, பாதுகாப்பைச் சிதைக்கப்போகிறது. “எல்அய்சி நிறுவனம் பல்லாண்டுகளாகப் பலகோடி இந்தியர்களின் தேவைகளை நிறைவு செய்து, தனது திறம்பட்ட செயல்பட்டால் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்கி உள்ளது. அத்தகைய நிறுவனத்தின் பங்குகளில் 5 சதவீதத்தை விற்க ஒன்றிய அரசு வரைவு அறிக்கை தாக்கல் செய்திருப்பது, தனியார்மயத்தை நோக்கிய முற்றிலும் விரும்பத்தகாத செயலாகும். இம்முடிவு மக்களின் நலனையோ எல்அய்சி நலனையோ கருதி மேற்கொள்ளப்பட்டது இல்லை. முறையான யோசனை இன்றி எடுக்கப்பட்ட முடிவை ஒன்றிய அரசு திரும்பப் பெற்று எல்அய்சியைக் காக்க வேண்டும்.” என்று எல்அய்சி பங்கு விற்கும் முடிவைத் திரும்பப் பெறுமாறு ஒன்றிய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மதத்தை மட்டுமே வைத்து அரசியல் செய்பவர்களுக்கு எப்படி மதியுள்ள வகையில் திட்டமிடத் தெரியும்? கார்ப்பரேட் வரியை உயர்த்தவோ, வாரிசுரிமை வரியை உயர்த்தவோ அரசியல் உறுதி இல்லாமல், ஏழைகளுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் எல்.அய்.சியின் பங்குகளை விற்று பட்ஜெட் போடுகிறார்கள். இது பட்ஜெட்டிற்கான நிதி திரட்டுவதில் ஒன்றிய அரசு அடைந்திருக்கும் தோல்வி. சென்ற ஆண்டு 1 லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் பங்கு விற்பனைக்கான இலக்கை நிர்ணயித்து அதில் 12 ஆயிரம் கோடி ரூபாய்தான் திரட்டப்பட்டது. அதனால் எப்படியாவது 70 ஆயிரம் கோடி அளவில் எல்.அய்.சியிலிருந்து திரட்ட முடியுமா என்பதற்காக இந்தப் பங்கு விற்பனைச் செய்யப்படுகிறது.

எனவே எந்த வகையில் பார்த்தாலும், எல்அய்சி என்கிற ஒரு நிறுவனத்தோடு நின்றுவிடாமல், ஒட்டுமொத்த சமூக வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும், இந்தப் பங்கு விற்பனையானது கேட்டைத்தான் தரும். ●

# 45 ஆம் புத்தகக் கண்காட்சி - 2022


YMCA மைதானம், நந்தனம், சென்னை.


**கருஞ்சட்டைப் பதிப்பகம் - கடை எண் : 41 மற்றும் 42**

































## கருஞ்சட்டைப் பதிப்பகம்

120 என்.டி.ராமாராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 24 இணையதள முகவரி: karunchattaibooks.com

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அசைக்க முடியாத முதல்வர்



தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று ஓர் ஆண்டு கூட நிறைவடையவில்லை.

இக்குறுகிய கால ஆட்சியில் மக்களுக்குச் செய்த மக்கள் நலத்திட்டங்களையும், கழகத் தேர்தல் வாக்குறுதியில் 90 விழுக்காடு நிறைவேற்றி உள்ளதாகவும் பட்டியல் இடுகிறார் முதல்வர் ஸ்டாலின், மக்கள் முன்னிலையில்.

எடப்பாடி பழனிச்சாமியாக இருக்கட்டும், ஓ.பன்னீர் செல்வமாக இருக்கட்டும் அவர்கள் செய்த 10 ஆண்டு கால மக்கள் நலத்திட்டங்கள் என்னென்ன என்று இது வரை மேடைகளில், மக்கள் முன் பேசவில்லை.

மாறாக எங்கள் திட்டங்களைத்தான் ஸ்டாலின் நடைமுறைப் படுத்துகிறார், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை, "அமாவாசை"க் கணக்கில் ஆட்சி மாறப் போகிறது, ஒரே நாடு - ஒரே தேர்தல் என்று கோயபல்ஸ் போல தேர்தல் பரப்புரையில் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒரே நாடு - ஒரே தேர்தல் என்ற பா.ஜ.க.வின் அஜண்டாவுக்குப் பழனிச்சாமி நன்றாகவே ஒத்தூதுகிறார். ருமேனிய நாட்டுக்காரர் ஒருவர் கூட, ஸ்டாலின் படமேந்தி பேருந்தில், வீதியில் வாக்கு சேகரித்தது ஈ.பி.எஸ் - ஓ.பி.எஸ்க்குத் தெரியாதா?

வேடிக்கை என்னவென்றால் அவர்களுக்குள்ளேயே ஒற்றுமை இல்லை. இது அவர்களுக்கே தெரியவில்லை.

உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டு இல்லை. ஆனால் நாங்கள் கூட்டணியில்தான் இருக்கிறோம் என்கிறார் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை.

கூட்டணி இல்லை என்கிறார் அ.தி.மு.க ஜெயகுமார். 'இல்லையில்லை; இப்போது இல்லை, ஆனால் கூட்டணி தொடரும்' என்கிறார் பழனிச்சாமி ! ஓ.பன்னீர்செல்வம்....?

இப்படி அவர்கள் குழம்பிக் கொண்டு இருப்பதில் நமக்குக் கருத்தேதும் இல்லை.

ஆனால் தி.மு.கழக ஆட்சியைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில், அவர்கள் அளந்துவிடும் பொய்களை மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்திய ஒன்றியத்தின் முதன்மையான, வலிமையான முதல்வர் மு.க.ஸ்டாலின்தான் என்று நாடும், மக்களும் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள்.

இனி, இரும்பு அடிக்கும் இடத்தில் ஈக்களுக்கு என்ன வேலை !

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**


இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை- 600 024,**

தொலைபேசி: 044-2472 6408












# தில்லைக் கோயிலின் தீண்டாமை

சாரதாதேவி

கடந்த ஞாயிறு 13.2.2022 அன்று, தில்லை நடராஜர் கோயிலில், கனக சபை எனப்படும் திருச்சிற்றம்பல மேடை ஏற முயற்சித்ததற்காக ஜெயசீலா என்ற பட்டியலினத்துப் பெண்ணை சாதிய ரீதியாகக் கடுஞ்சொற்களால் தாக்கியும், உடல்ரீதியாகத் துன்புறுத்தியும் கோயிலில் இருந்து வெளியேற்றி உள்ளது ஒரு தீட்சிதர் குழு.

சிதம்பரம், தில்லை நடராஜர் கோயில் என்பது உலகெங்கும் சைவ சமயத்தைப் பின்பற்றும் சற்றொப்ப 4 கோடி தமிழர்களின் நம்பிக்கைத் தலமாகும். சோழர்கள் காலத்தில் 10 ஆம் நூற்றாண்டில் முதலாம் குலோத்துங்கச் சோழன் வேளாண் பெருமக்களின் நிலங்களைக் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்து நிறுவப்பட்டது.

இன்று 40 ஏக்கர் நிலப்பரப்பில் இருக்கும் அந்தக் கோயிலின் சொத்து சுற்றிலும் 2500 ஏக்கர் நிலம், நகர்ப்புற சொத்துகள், இலங்கையில் நிலம் என பல ஆயிரம் கோடிகளைப் பெறும். ஆண்டு உண்டியல் வருமானம் மட்டுமே சில கோடிகள். தானமாக வரக்கூடிய பல்வேறு செல்வங்கள் தனி. கைலாயத்திலிருந்து வந்ததாகச் சொல்லிக்கொள்ளும் “தீட்சிதர்கள்” எனும் பார்ப்பனக் கூட்டம் இக்கோயிலைக் கைப்பற்றிக்கொண்டு, தமிழ் மொழியைக் கொஞ்சம் கொஞ்சமாக விலக்கிவிட்டு, அவர்கள் ஆளுகையின் கீழ் வைத்து, அதன் செல்வங்களை ஏகபோகமாக அனுபவித்து வருகிறார்கள். முதலில் 3000 பேராக இருந்த அந்தக் கூட்டம் இப்போது 400 பேர் என்று குறைந்தாலும் வற்றாத செல்வங்களைக் கொண்ட கோயிலைத் தமிழரிடம் விட்டுக்கொடுக்க அவர்கள் தயாராக இல்லை.

தமிழை வளர்த்த சைவர்கள் தாங்கொணாமல் தமிழ்மொழிக்காகவும் வழிபாட்டு உரிமைகளுக்காகவும் கோயிலுக்குள் நிகழ்த்தும் போராட்டங்கள் நந்தன் காலம் தொட்டு தொடர்கின்றன. நந்தனார் நுழைந்ததால் தெற்கு வாயிலையே தீட்சிதர்கள் அடைத்து விட்டதாகச் சொல்கிறார்கள். 1983-84 காலகட்டங்களில் இவர்களிடையே குழுக்கள் உண்டாகி, கோயிலுக்குள் நகைத்திருட்டு, போதைப் பொருட்கள், அசைவ விருந்து(?), வன்முறை, கொலை போன்ற குற்றங்கள் வெளிவரத் தொடங்கின. அப்போது கோயிலை அரசுடைமையாக்க எடுத்த முயற்சிகளையும் அவர்கள் அப்போதிருந்த எம்.ஜி.ஆர் அரசின் உதவியோடே முறியடித்தனர். 2007இல் ஆறுமுகச்சாமியைத் தமிழில் ஓதவிடாமல் அடித்து விரட்டியபோது மீண்டும் இச்சிக்கல் பெரிதானது. அப்போதிருந்த கலைஞர் அரசு எல்லா சதிகளையும் முறியடித்து நடராசர் கோயிலை அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வந்தது. அப்போதுதான் கோயிலின் வருமானம் சொத்து ஆகியவை அரசுக்குத் தெரிய வந்தது. அதுவரை அவர்கள் சொற்ப வருமானத்தையே கணக்குக் காண்பித்து வந்துள்ளனர். அவாள் அரசு மீண்டும் 2011 இல் வந்தவுடன், அவர்கள் விசுவ இந்து பரிஷத்தின் அன்றைய தலைவர் அசோக் சிங்கால். சுப்ரமணிய சுவாமி ஆகியோர் உதவியுடன் உச்சநீதிமன்றத்தை வளைத்து மீண்டும் கோயிலை அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டனர்.



கொரோனா காலத்தில் சிற்றம்பல மேடையில் ஏறி வழிபடத் தடை இருந்தது. இப்போது தளர்வுகள் அனுமதித்தும், தீட்சிதர் குழுக் கூட்டத்தில் ஒரு குழு மட்டும் தடையை நீக்க மறுப்பு தெரிவித்துள்ளது. கனக சபையில் ஏற முயன்ற கணேச தீட்சிதரை அடித்துள்ளனர். அவர் காவல் துறையில் புகார் அளித்துள்ளார். அவருடைய மகள், ஜெயசீலா என்ற லட்சுமி, என்ற பெண்ணை கனக சபையில் ஏறச் சொல்ல, அவரையும் சாதிய அவதூறு செய்து மானபங்கப் படுத்தி விரட்டி உள்ளனர். அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் 20 தீட்சிதர்களின் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டுள்ளது.

அந்த மேடையில் ஏறினால் கோயிலின் எல்லாப் பக்கங்களையும் எல்லா இண்டு இடுக்குகளையும் பார்த்துவிடலாமாம். அங்கே நடக்கும் இரகசியங்களை மக்கள் பார்க்காமல் இருக்கவே இந்தத் தடையை ஒரு குழு நீடிக்கச் சொல்வதாக விரட்டிவிடப்பட்ட அந்தப் பெண் சொல்லுகிறார்.

கோயில்கள் மக்களின் பொதுச் சொத்தாகவே இருக்க வேண்டும். தில்லை நடராஜர் கோயில் போல பார்ப்பன ஆதிக்கத்திலிருக்கும் எல்லாக் கோயில்களையும் அரசுடைமை ஆக்குவதே இதற்குத் தீர்வாகும். தொடரப் போகும் பார்ப்பன சதிகளையும் எதிர்பார்த்து அவற்றை முறியடிக்கும் போராட்டங்களைத் தமிழ் மக்கள் அனைவரும் முன்னெடுக்க வேண்டும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai.   Editor Suba. Veerapandian